பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 4 ஜுூல்-கஜ் 10 இதழ் 251
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20 - 10 - 80

## மணிலாமாநாட்டில் குண்டுவெடித்தது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மயிரிழையில் உயிர்தப்பினர்

மணிலா, அக். 19

பிலிப்பைன்ஸ் அதிபர் பேர்டினன்ட் மார்க்கோஸ் இன்று மயிரிழையில் உயிர் தப்பினர்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள சர்வதேச மகாநாட்டு நிலையத்தில் இன்று ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்திலிருந்தே ஜனாதிபதி மார்க்கோஸ் உயிர் தப்பினர்.

இந்த நிலையத்தில் அமெரிக்க பிரயாணிகள் முகவர்கள் சங்க மகாநாடு இன்று நடைபெற்றது. இம் மகாநாட்டுக்கு வருகைதந்திருந்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அவசர அலுவல் காரணமாக உடனடியாகப் புறப்பட்டதனலேயே அவர் உயிர் தப்பியதாக அறிவிக்கப்பட்டது.

# "மக்களின் ஜனநாயகசுதந்திரம் எவ்விதமும் பாதுகாக்கப்படும்"

## பொலநறுவையில் ஜனாதிபதி ஜே. ஆர். உறுதி!

### 'இந்நாட்டில் சர்வாதிகாரத்துக்கு இடமில்லை'

(பொல்நறுவை)

"மக்களின் ஜனநாயக சுதந்திரம் எவ்வித இடையூறுமின்றிப் பாதுகாக்கப்படும். ஜனநாயக அமைப்பின்கீழ் இந்த நாட்டில், எதிர்காலத்தில் சர்வாதிகாரத்துக்கு இடம் இருக்காது" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பொலநறுவையில் ஏர்பூட்டு விழாவை ஆரம்பித்து வைப்பதற்குமுன் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் உறுதியளித்தார்.

பிரதமர் ஆர். பிரேமதாசா விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் ஈ. எல். சேனநாயகா ஆகியோரும் மற்றும் பலரும் கலந்துகொண்ட இவ் வைபவத்தில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் குடியுரிமையை ஏழுவருடங்களுக்கு நீக்கிவைப்பதென்று பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானம் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினர்.

தாம் முதலாவது சட்டசபைக்குப் பிரதிநிதியாகச் சென்ற காலத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டலஞ்சக் குற்றச்சாட்டுமசோதாவை அப்பொழுது திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆதரித்தது பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, இப்பொழுது திரு. எஸ். டபிள்யு, ஆர். டி. பண்டாரநாயக்கா உயிருடனிருந்தால் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அதிகாரதுஷ்பிரயோகம் பற்றிய ஆணைக்குழுவின் சிபார்சுகளையும் பாராளுமன்றம் அவரதுகுடியுரிமையை ஏழு வருடங்களுக்குநீக்கிவைப்பதென்று எடுத்த தீர்மானத்தையும் நிச்சயம் ஆதரித்திருப்பாரென்றும் ஜனாதிபதி கூறினர்.

முன்னைய அரசாங்கம் அவசாகாலச் சட்டத்தைப் பிறப்பித்துப் பல சட்ட மூலங்களை நிறைவேற்றியது பற்றியும் ஜனாதிபதி ஜே. ஆர். விளக்கமாக எடுத்துச் சொன்னர்.

"திருமதி சிறிமா ஆட்சிக் காலத்தில் ஒரு கோடி நாற்பது லட்சம் மக்களின் குடியுரிமைகள் இரண்டு ஆண்டுக் காலம் தடைப்பட்டதை, மறந்திருக்க முடியாது. முன்னைய அரசின் ஆறு ஆண்டுக் கால அவசரகாலச் சட்டத்தின்கீழ், அப்பாவி மக்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். பலர் கொலையும் செய்யப்பட்டனர். வேறு பலர் காணி சுவீகரிப்பின்கீழ் பழிவாங்கப்பட்டனர். இப்பொழுதுள்ள விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு எதிராக இப்பொழுதும்கூட சிபார்சுசெய்ய அதிகாரம் உண்டு. ஆணைக்குழு சிபார்சு செய்தால்; இந்த அரசாங்கத்தில் உள்ளவர்களின் குடியுரிமையும் நீக்கப்படும்.

தன்னுடைய குடி உரிமையைப் பறிப்பதற்கு முன்னைய அரசாங்கம் முயற்சி எடுத்ததென்றும் இதற்காக ஒருதெரிவுக்குழுவை நியமித்ததென்றும் திரு. ஜெயவர்த்தன சொன்னர்.

## வானொலியில் அந்த உரைகள்

(பொலநறுவை)

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கலந்துகொண்ட கூட்டங்களில் நாட்டில் வன்செயலைத் தூண்டிவிடக் கூடிய முறையில் உரையாற்றியவர்களின் பேச்சுக்களை பொதும கள் விரைவில் இலங்கை வானொலியில் கேட்கலாம் என்று ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன இங்கு கூறினர்.

நாடாக்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அந்தப் பேச்சுக்களை பொதுமக்களும் அவசியம் கேட்கவேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஈராக் ஈரான் துருப்புகள்

## கொரம்ஷார் நகரில் கடும் சண்டை!

### யுத்தநிறுத்தத்துக்குமண்டல சார்பற்ற நாடுகள் முயற்சி

நியுயோர்க், அக். 19

ஈரான்-ஈராக் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதில் இந்த இரு நாடுகளுமே அங்கம் வகிக்கும் மண்டல சார்பற்ற நாடுகள் முயற்சிசெய்து வருகின்றன.

மண்டலசார்பற்ற நாடுகளின் குழுக்கூட்டம் விரைவில் நியுயோர்க்கில் கூடி இதுபற்றி ஆராயவிருக்கிறது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாஸிர் அரபாத்தின் முயற்சியைத் தொடர்ந்தே மண்டல சார்பற்ற நாடுகள் ஈராக்-ஈரான் யுத்தநிலைமை பற்றிஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

ஹஜ் பண்டிகை அனுஷ்டிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஹஜ் வாழ்த்து

அனைவருக்கும் இனிய ஹஜ் நல்வாழ்த்துக்களை 'ஈழநாடு' தெரிவித்துக் கொள்கிறது.

ஹஜ்பெருநாள் யுத்த நிறுத்தம்:

## பாக். ஜனாதிபதி கோரிக்கை: ஈரான் - ஈராக் நிராகரிப்பு!

லண்டன், அக். 19

ஹஜ் பெருநாளை முன்னிட்டு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை ஈரானும் ஈராக்கும் நிராகரித்துவிட்டன!

நாளை (திங்கட்கிழமை) வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவுல் ஹக் ஈரானுக்கும் ஈராக்குக்கும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அவரது கோரிக்கையை இரு நாடுகளுமே உதாசீனம் செய்து சண்டையில் மும்முரமாக ஈடுபட்டன.

நேற்று அபடான் நகரைச் சுற்றி கடுமையான யுத்தம் நடந்தது. ஈராக் விமானங்கள் பெரும் தாககுதலில் ஈடுபட்டன. அதே நேரத்தில் ஈராக் தலைநகர்பாக்தாத்தில் ஈரானிய விமானங்கள் நேற்று குண்டு மாரி பொழிந்தன. நான்கு ஈரானிய யுத்த விமானங்களை ஈராக் சுட்டு வீழ்த்தியது.

## 5-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு: கருணாநிதி கருத்து

சென்னை, அக். 19

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் மதுரையில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் கலந்துகொள்ளமாட்டாது எனத் தெரியவருறது.

இதுபற்றி தி. மு. [illegible] வர் கலைஞர் மு. [illegible] இன்று நிருபர்களிடம் தெரிவிக்கையில், அ. இ. அ. தி. மு. க. அரசு நடத்த இருக்கும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ள தமக்குத் தகுதி இல்லை என்றும், ஐந்து கோடி ரூபா செலவில் நடைபெறும் இம்மகாநாடு சம்பந்தமாக பல தவறுகள் இழைக் [illegible]

## கரையோரப்பகுதி கப்பல் சேவை: நவ.1-ல் ஆரம்பம்

(கொழும்பு)

கரையோரப் பகுதி கப்பற் சேவை, அடுத்தமாதம் முதலாம் திகதி ஆரம்பித்துவைக்கப்படும்.

வாடகைக்கு அமர்த்தப்படும் நான்கு கப்பல் ள், இப்புதிய சேவையில் ஈடுபடும். இச்சேவை முதலில் கொழும்பு திருகோணமலை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு இடங்களுக்கும் நடைபெறும்.

குறிப்பாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் போன்ற அரசு வர்த்தக நிறுவனங்களின் பொருள்களை ஏற்றிச்செல்வதில் இக்கப்பல்கள் ஈடுபடும்.

## இந்தியத் தூதர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு. தோமஸ் ஏபிரகாம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்று மாலை இங்குவந்த அவர் இரண்டு தினங்கள் யாழ் நகரில் தங்கியிருப்பார்,

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

2 பெரிய கண்ணாடி அலுமாரி, 2 சிறிய கண்ணாடி சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு. தினசரி பார்வை இடலாம். தொடர்புகொள்க; வருத்துப் பளை முறிவு, நோவு வைத்திய சாலை, 245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7120

வெற்றுத்தேயிலைப் பெட்டிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். அண்ணா தொழிலகம், இணுவில் தெற்கு, இணுவில். 7123

வண்ணார்பண்ணையில் 1¼ பரப்புடன், நவீன வசதிகளுடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்குண்டு. 86, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 7125

7 ஸ்ரீ தொடர்பிலக்க பல்க்கன் ஸ்கூட்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு;- 13, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். 714

### தேவை

பிரபல வியாபார நிறுவனமொன்றிற்கு குறைந்தது ஐந்து வருட அனுபவமும்; வயது 25-க்கும் 40-க்கும் இடைப்பட்ட வான் சாரதி தேவை. அரசாங்க வர்த்தக விடுமுறைகளும், ஞாயிற்றுக்கிழமைகளும் லீவாகக் கொள்ளப்படும். மாத வேதனம் ரூபா 450/-ம் விற்பனைத் தினங்களுக்கு விசேட படியும் கொடுக்கப்படும். 25-10-80-க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 7131 C/o. ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7131

இரண்டு சில்லு ட்ராக்டர் நீரிறைக்கும் பம்புகள் திருத்துவதில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள் இருவர் தேவை. 24-10-80-ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். திருச்செல்வம் அன் கொம்பனி, 510, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7139

ஆங்கிலத்தில் கடிதத் தொடர்புகள் செய்யக் கூடிய கணக்கியல் அறிவுள்ள லிகிதர் தேவை. இளைப்பாறியவர்கள் விரும்பத்தக்கது. 24-10-80-ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். திருச்செல்வம் அன் கொம்பனி, 510, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7138

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 7107

### வகுப்புக்கள்

மோட்டார் மெக்கானிசம், எலக்ரிக்கல் வயரிங், வெல்டிங், ஆகியவற்றின் புதிய வகுப்புக்கள் ஒவ்வொரு மாத முதல் பகுதியிலும் ஆரம்பிக்கப்படும். தொடர்பு கொள்க:- Patrician Industrial Institute 59, St Patrick's Rd, Jaffna. 7146

## உப்புஆலை திறக்கப்படும்

(மன்னார்)

தலைமன்னாரில் உப்புஆலை ஒன்று திறந்துவைக்கப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மேற்கொண்டுவருகிறது. (ஈ)

அ. இ. தமிழ்ப் பாடசாலை

# இசை, நடன, நாடக போட்டி முடிவுகள்

[உடுப்பிட்டி]

கல்வி அமைச்சினால் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்ட அனைத்து இலங்கைத் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கிடையிலான இசை நடன, நாடக இறுதிப் போட்டிகளின் முடிவுகள் சென்ற சனிக்கிழமை வெளிவந்துள்ளன. மீதி தொடர்ந்து வெளிவருகின்றது.

### தனி நடனம்

கீழ்ப்பிரிவு—(பரதம்) ந. நகுலினி (கொக்குவில் இந்து பிரதம பாடசாலை), ந. கிருஷ்ணவேணி (வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் ம. வி.), ஐ. அருள்மொழி (முள்ளியவளை அ. த. க. பாடசாலை.)

(கிராமியம்) - க. அற்புதராணி (சாவகச்சேரி றிபேக்), பா. வத்சலா (முல்லைத்தீவு இந்து த. க. பாடசாலை).

(புதிய ஆக்கம்) - சி. அனந்தினி (நடேஸ்வரா கனிட்ட வித்தியாலயம்), இ. யாமினி (முல்லைத்தீவு இ. த. க. பாடசாலை).

மத்தியபிரிவு— (பரதம்) ஆ. மேகலை (பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர் பாடசாலை), அ. ஷாமிலா (மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர் பாடசாலை), ஜீ. ஜீவநந்தினி (வவனியா ம. வி.)

(கிராமியம்) - கோண்டாவில் சைவத் தமிழ் வித்தியாசாலை.

(புதிய ஆக்கம்) - வவனியா வித்தியானந்தாக் கல்லூரி.

(கதகளி) - வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலயம்.

மேற்பிரிவு — (பரதம்) தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் உயர்தர வித்தியாலயம், வவனியா றம்பைக்குளம் மகளிர் வ. வி.

(கிராமியம்) - அக்கரைப்பற்று இ. கி. மி. வித்.

(புதிய ஆக்கம்) - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

### குழு இசை

மேற்பிரிவு — (தேசியம் - பாரம்பரியம்) - இளவாலை கன்னியர் மடம், மட்டக்களப்பு-கோட்டைமுனை ம. வி., முல்லைத்தீவு ம. வி.

(கர்நாடகம்) -மட்டக்களப்பு சிசிலியா மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி.

(புதிய ஆக்கம்) - யாழ். நடேஸ்வராக் கல்லூரி, வவனியா புதுக்குளம் அ. த. க. பாடசாலை, மன்னார் அடம்பன் ம. வி.

மத்தியபிரிவு — (தேசியம் - பாரம்பரியம்) -வவனியா புதுக்குளம் அ. த. க. பாடசாலை, பட்டிருப்பு ம. வி, யாழ். நடேஸ்வராக் கல்லூரி.

(கர்நாடகம்)-தெல்லிப்பழை மகஜனக் கல்லூரி, வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலை, கல்முனை சாகிராக் கல்லூரி.

(புதிய ஆக்கம்) - மட். புனித மைக்கல் கல்லூரி, கல்முனை காமல் பத்திமாக் கல்லூரி, கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி.

கீழ்ப்பிரிவு—(தேசியம்-பாரம்பரியம்) - கல்முனை காமல் பாத்திமா, பண்டாரிக் குளம் அ. த. க. பாடசாலை, பேசாலை றோ. க. த) வித்.

(கர்நாடகம் - யாழ். இந்து த. க. பிரதம பாடசாலை.

(புதிய ஆக்கம்) - யாழ். யோன் பொஸ்கோ பாடசாலை, திருமலை-உவர்மலை தமிழ் வித்தியாலயம், மட். அரசடி ம. வி.

### குழு நடனம்

நேமபிரிவு — (பரதம்) - மானிப்பாய் மகளிர் கல்லூரி

[6-ம் பக்கம் பார்க்க]

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்

## ஏல விற்பனை

எதிர்வரும் 24-10-80 வெள்ளிக்கிழமை மு. ப. 10 மணிக்கு எமது சங்கக் காரியாலயத்தில் (பரந்தனில்) கீழ்க்காணும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

விபரம்:-

1. மச்சிட் குறுணல்
2. கியூறேற்றர்
3. கப்ரான்
4. மிளகாய் உரக்கலவை
5. லொறி றேடியேற்றர் (பழையது)
6. மின் தெளிகருவிகள் (பழையது)
7. தட்டச்சு இயந்திரங்கள் (பழையது)
8. பைசிக்கிள் [பழையது]

**பொதுமுகாமையாளர்**
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்
பரந்தன்
7129

## அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய கொக்குவில் மேற்கு, கொக்குவில் குழந்தைவேலு பெண் மனோன்மணியின் மரணச் சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்
செல்லத்துரை ஜெகநாதன், பொன்னையா ஒழுங்கை, வண்ணார் பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.
மனுதார்

வழ. இல. ரி / 3541
எதிர்
செல்லத்துரை தில்லைநாதன் தற்போது இல. 15/1, மெய்ற்லன்ற் கிறசன்ற், கொழும்பு 7.
எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில், அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ந் திகதி.

நீதிமன்றஆணைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது:
**த. சோமசுந்தரம்,**
மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி. 7111

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

ஞாயிற்றுக்கிழமை 26-10-1980 காலை 9 மணி

## குமாரசுவாமி மண்டபம்

பழைய மாணவர்களனைவரும் சந்தாவைச் செலுத்தி வருகை தரவும்.

வருடசந்தா: ரூபா 2.50 ஆயுட்சந்தா ரூபா 25/-

செயலாளர்.

7096

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## இறைச்சிக்கடைகள், மரக்கறிச்சந்தை (வல்வெட்டித்துறை), மீன் சந்தைகள் (வல்வெட்டித்துறை, தொண்டமானாறு)

என்பவற்றிற்கான 1981-ம் ஆண்டுக்கான

# குத்தகைக்கான கேள்வி கோரல்

01-01-1981-ந் திகதி முதல் 31-12-1981-ந் திகதி வரையான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளின் வியாபாரம் நடாத்தும் உரிமையின் குத்தகை, வல்வெட்டித்துறை மரக்கறிச்சந்தை, வல்வெட்டித்துறை மீன்சந்தை, தொண்டமானாறு மீன்சந்தை ஆகியவற்றிற்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளில் 05-11-1980-ந் திகதி முற்பகல் 10-00 மணிவரை இவ்வலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை

| வியாபாரம் | கடை இல. | 1980-ம் ஆண்டிற்கு ஏற்றுக் கொண்ட தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக்கடை | 6 | 6011/- | 100/- | 15/- |
| 2. வல்வெட்டித்துறை மரக்கறிச்சந்தை | | 23776/- | 150/- | 25/- |
| 3. வல்வெட்டித்துறை மீன்சந்தை | | 12155/- | 100/- | 15/- |
| 4. தொண்டமானாறு மீன்சந்தை | | 1200/- | 25/- | 10/- |
| 5. ஆட்டிறைச்சிக்கடை | | 640/- | 15/- | 05/- |

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப்படிவப்பணமும் செலுத்தப்படுவதன் பெயரில் கேள்விப்பத்திரங்கள் 03-11-1980-ந் திகதி பிற்பகல் 03-00 மணிவரை வழங்கப்படும். வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படும். கேள்வி வைப்புப்பணமும், படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படவேண்டும்.

முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிற் சேர்க்கப்படலாம் அல்லது பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படலாம். எந்த வியாபாரத்திற்கு கேள்வி விடுக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விகள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ, எவற்றையுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலைவருக்குண்டு. 1980-ம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைக்கு குறைந்த கேள்விகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

கேள்விகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்கப்பட்டது என்று சம்பந்தப்பட்டவருக்கு அறிவிக்கப்பட்டதும் கேள்வித்தொகையின் 25% பணத்தை இக்காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

சபைக்கு எந்தவிதமான கொடுப்பனவுமுள்ள கடனாளிகள், முன்பு குத்தகையைப் பாரமெடுத்து முறையாக நடத்தத் தவறியவர்கள், விலைக்கட்டுப்பாட்டதிகாரி அவர்களால் தண்டிக்கப்பட்டவர்கள் இதில் பங்குபற்றுவதற்கு அருகதையற்றவராவார்.

குத்தகையைப் பாரமெடுப்பவர் தலைவருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

**ச. ஞானமூர்த்தி**
தலைவர்
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 16-10-1980.

7130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகை ஷோபா மரணம் சம்பந்தமாக

## பாலு மகேந்திரா கைது!

சென்னை, அக். 19.

சில மாதங்களுக்கு முன்பாக தமது வீட்டு அறையில் தூக்குப்போட்ட நிலையில் இறந்து கிடந்த நடிகை ஷோபாவின் மரணம் தொடர்பாக, அவரது கணவர் பாலு மகேந்திரா கைது செய்யப்பட்டுள்ளார்.

நடிகை ஷோபாவின் மரணம் தொடர்பாக, அவரது தாயார் பிரேமா, சந்தேகம் தெரிவித்து ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு புகார் தெரிவித்ததைத்தொடர்ந்தே விசாரணைகள் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டன.

ஷோபாவின் உதவியாளர் வசந்தி அரசாங்கதரப்பு சாட்சியாக மாறக் கூடும் என்று நினைத்து, இனந்தெரியாத இருவர், அவரது வீட்டுக்குச் சென்று, 'ஷோபாவின் கதிதான் உனக்கு ஏற்படும்' என்று அவரை மிரட்டியுள்ளனராம். இதனைத் தொடர்ந்தே பாலு மகேந்திரா பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

திரைப்பட டைரக்டரும் ஒளிப்பதிவாளருமான பாலு மகேந்திராவிடம், பொலிசாரினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுது, ஆபாஸ திரைப்படங்கள் (புளூ பிலிம்) கைப்பற்றப்பட்டனவாம். இதுசம்பந்தமாக அவர் மீது தனியான வழக்கொன்றும் தொடரப்படுமெனத் தெரிகிறது. [ச]

## போலி பாஸ்போர்ட்: இருவர் மீது விசாரணை

[மன்னார்]

யாழ்ப்பாணம், கொழும்பைச் சேர்ந்த இருவர் போலி பாஸ்போட்டுடன் இந்தியா சென்று திரும்புகையில் குடியகல்வு குடிவரவு அதிகாரிகளிடம் அகப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று வருகிறது. (ச]

## விவசாயிகளுக்கு பயிற்சி

(நெல்லியடி)

அளம்பில் விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கு நெற்செய்கை, நிலக்கடலை, உழுந்து பயிரிடல் ஆகியவற்றிலும் வீட்டுத் தோட்ட முறையிலும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கான பயிற்சி வகுப்பொன்று இம்மாதம் 24ம் திகதி காலை 8மணிக்கு அளம்பில் சுமநலச் சேவை நிலையத்தில் நடைபெறுமென முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## மண்டைதீவில் 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் சந்தேகத்தின் பேரில் 6 இளைஞர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்த பயங்கர ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். (ச[

## கண்டக்டர் தாக்கப்பட்டார்

(மட்டுவில்)

இ. போ. ச. கண்டக்டர் ஒருவர் இனந்தெரியாத நபர் ஒருவரால் தாக்கப்பட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நுணாவில் சந்தி பஸ்தரிப்பில் திருக்கிப் பிரயாணிகளை ஏற்றும்போதே இச்சம்பவம் நடைபெற்றது. இதுசம்பந்தமாக சாவகச்சேரி பொலிசில் புகார் செய்யப்பட்டது. பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று புலன் விசாரணை நடாத்தினர் சந்தேகநபரைத் தேடிவருகிறார்கள். (கு)


# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

மொத்த ஆதனம் ரூபா 25 கோடிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்.
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்.

## ஒரு வருட வைப்புத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| மாதாந்தம் செலுத்தப்படுவது | 20% | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | 22% |

அதி குறைந்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

## இரு வருட வைப்புத் திட்டங்கள்

| மாதாந்தம் செலுத்தப்படுவது | | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | |
|---|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 21% | ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 24% |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா100,000/- ற்கும் கீழ் | 22% | ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/- ற்கும் கீழ் | 25% |
| ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 24% | ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 27% |

## மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.
51-53, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19

கிளைகள்:
யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை தொலைபேசி: 2466
அனுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்த தொலைபேசி: 534
வீதி, தொலைபேசி: 4196

மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்.

(ஏஜன்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

MASTERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நீ உன்னை முற்றிலும் இறைவனுக்கு சமர்ப்பணம் செய்து கொண்டு விட்டாயானுல் உனது நாளைய தேவைகளைப்பற்றி கடவுளே கருத்துக் கொள்வார். கடவுள் நமக்கு மிகமிகச் சொந்தமானவர். நீ அவரை வற்புறுத்தி வேண்டலாம்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### தமிழ்மொழி உபயோகம்

அரசாங்கம் தமிழுக்கு உரிய இடம் வழங்கினுலும் தமிழ் மக்கள் தமது பணிகளில் தமிழை உபயோகிக்கத் தயங்குவது ஏன் என்றும் இந்தத் தாழ்வு மனப்பான்மை நீங்கித் தமிழன் தமிழ் மொழியைத் தனது பணிகளில் உபயோகிக்க வேண்டுமென்றும் பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கம், இந்து சமய விவகார அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

உலகத் தொடர்புக்கும், புதிய புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும் கலைச்சொற்களையும் அறிந்து கொள்வதற்கும் ஆங்கிலம் அவசியம்தான்.

ஆனால் கணவன் - மனைவிக்கும், தந்தை - மைந்தனுக்கும் ஆங்கிலத்தில்தான் தொடர்பு இருக்கவேண்டுமா?

இந்த அன்னிய மொழி மோகம் இன்றும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

"பேபி பேபி முனைப்பார்' என்று ஒரு தமிழ்த்தாய் தனது குழந்தைக்கு நிலாக் காட்டிச் சோறுஊட்டிய காட்சி பரிதாபக் காட்சியாக இருந்ததென்று திரு. இராசதுரை அமைச்சராக வருவதற்குப் பல வருடங்களுக்கு முன்பே மேடைகளில் பேசி, தமிழ் மக்கள் தமது மொழியைப் பயன்படுத்தவேண்டிய அவசியத்தை உணர்த்தியவர்.

இன்று தமிழ்மொழியை அமுல் செய்வதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் என்ற வகையில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதில் தமிழர்கள் தயங்குகிறுர்களென்று கூறுவதில் காத்திரமிருக்கின்றது.

'தனித்தமிழ் இயக்கம்' இங்கு இடையிடையே ஆரம்பிக்கப்பட்டதுமுண்டு. இதற்கு ஒரு இயக்கம் தேவையில்லை. தமிழர் ஒவ்வொருவரும் தமது தாய் மொழிக்குக் கொடுக்கவேண்டிய இடத்தை இதயத்தில் வைத்துக் கொண்டாலே போதும். இதற்காக பிற மொழித்துவேஷத்தை வளர்க்கவேண்டியது அவசியமல்லவென்பதையும் சுட்டிக் காட்டவிரும்புகிறேம்.

### நாடக நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் செ. கதிரேசபிள்ளையின் "பாரதம் தந்த பரிசு" நூல் வெளியீட்டு விழா இன்று மாலை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

திரு. பொன். சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் நூல் வெளியீட்டுரையை திரு. பொ. கனகசபாபதி நிகழ்த்துவார்.

# ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்புமலர்

# ஹஜ்ஜுப்பெருநாள்

## - ஒருவரலாற்றுநோக்கு

அகிலத்தில் பரந்துவாழும் சுமார் நூறு கோடி முஸ்லிம்கள் ஈதுல் அழ்ஹா என்னும் ஹஜ்ஜுப் பெருநாளை இன்று கொண்டாடுகின்றனர். முஸ்லிம்களால் கொண்டாடப்படும் இரு பெருநாட்களில் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று இறுதியாகக் கொண்டாடப்படுவது 'ஈதுல் பித்ர்' என்றும், துல்ஹஜ் மாதம் பத்தாம்நாளில் கொண்டாடப்படுவது 'ஈதுல் அழ்ஹா' என்றும் அழைக்கப்படுகின்றன. இவை இரண்டுமே முஸ்லிம்களின் முக்கிய பெருநாட்களாகும்.

இஸ்லாத்தின் கட்டாயக் கடமைகளான ஏக இறை விசுவாசம், தொழுகை, ஏழைவரி, நோன்பு ஆகியவற்றுடன் ஹஜ்ஜும் இடம்பெறுகின்றது. பணவசதியும், உடல்நலமும் திடகாத்திரமும் உள்ள முஸ்லிம்கள் வாழ்க்கையில் ஒரு முறையாவது புனித மக்காவுக்குச்சென்று 'ஹஜ்' என்னும் மார்க்கக் கடமையை நிறைவேற்றுவது அவசியமாகும். இக்கடமையுடன் தொடர்புபட்டதே ஹஜ்ஜுப் பெருநாள் என்னும் 'ஈதுல் அழ்ஹா' பெருநாளாகும். இத்தினத்தில் அகிலத்தின் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம்கள் சவூதி அரேபியாவில்உள்ள மக்கா நகரில் ஒன்று கூடுகின்றனர். மக்காவில் அமைந்துள்ள 'கஃபதுல்லாஹ்' என்னும் அல்லாஹ்வின் புனித பள்ளிவாசலில் 'இஹ்ராம்' என்னும்வெள்ளையினுலான ஒரேஉடையுடன் அனைவரும் தொழுகையில் ஈடுபடுவதுடன் சமயக்கிரியைகளையும் மேற்கொள்கின்றனர். மக்காவில் உள்ள 'கஃபத்துல்லாஹ்' என்னும் பள்ளிவாசல் வரலாற்றுப்புகழ்மிக்க பழமை வாய்ந்த ஆலயமாகவும்விளங்குகின்றது. இப்பள்ளிவாசல் பற்றிய குறிப்புக்கள் கிரேக்கர்களாலும், உரோமர்களாலும் கூட எழுதப்பட்டுள்ளன. இப்பள்ளிவாசல் அமைந்துள்ள திசையை நோக்கியே உலகத்தின் பலபாகங்களிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள பள்ளிவாசல்களின் 'கிப்லா' என்னும் திசை அமைந்துள்ளது. கஃபத்துல்லாஹ்வை முன்னோக்கியே முஸ்லிம்கள் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.

யூதர்கள், கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள் அனைவராலும் போற்றப்படும் இறை தூதர் நபி இபுருகீம் (அலை) அவர்கள் (எபிரகாம்) 'கஃபத்துல்லஹ்'வை புனர்நிர்மாணம் செய்து, உலக மாந்தருக்கு அழைப்புவிடுத்த செய்தி திருக்குர்ஆனில் விபரிக்கப்படுகின்றது. 'புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற வருமாறு நீர் மனிதர்களுக்குஅறிக்கையிடும். அவர்கள் கால்நடையாகவும் ஒட்டகைகளிலும் வருவார்கள் அல்குர்ஆன் அத்: 22. வச: 27. இறைநேசர் என அழைக்கப்படும் நபி இபுருகீம் (அலை) அவர்கள் உயர்ந்த தியாகங்களைச் செய்வதற்கு முன்னின்றவர்கள். தங்களது அருமை மைந்தர் இஸ்மாயில் (அலை) அவர்களை இறைவனுக்காகப் பலியிடமுன்வந்தவர்கள். இஸ்லாமிய வரலாற்றில் தியாகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள். அவர்கள் செய்த தியாகங்கள் ஹஜ்ஜை நிறைவேற்றச் செல்வோர்களால் ஞாபகமூட்டப்படுகின்றன. அல்லாஹ்வின் சட்டங்களுக்கு முற்றும் அடிபணிந்த அவர்களது நடைமுறைகளை உலக முஸ்லிம்கள் எல்லோரும் இப்புனிதநாளில் நினைவு கூருகின்றனர்.. இணையில்லா ஏக நாயனை அல்லாஹ்வின் அடிமைகள் என்பதை உலக முஸ்லிம்கள் இத்தினத்தில் தங்களது சமயக்கிரியைகளின் மூலம் செயலில் காட்டுகின்றனர். நாயனே! உனக்கு முற்றிலும் அடிபணிந்தோம்; நீயே பெரியவன் உனக்கு இணையில்லை என்று கோசமெழுப்புகின்றனர். ஒரேநாயனின் இல்லமான கஃபத்துல்லாஹ்வில் ஒரே உடையில் ஒன்றுகூடி தங்களது பாவங்களுக்காக அவனிடம் பாப மன்னிப்புக் கேட்கின்றனர். மக்கா மதீனு, அரபா ஆகிய இடங்களில் ஒன்றுகூடி இறைவணக்கம் புரிகின்றனர். இவையெல்லாம் நபி இபுருகீம் (அலை) அவர்களது காலத்திலேயே சிறப்பாக்கிவைக்கப்பட்டவையாகும். இன, குல, கோத்திர, நிற பேதங்களின்றி இறைவனின் முன்னிலையில் எல்லோரும் சமமே என்ற உண்மையை செயல்முறைப் படுத்தும் தியாகத்திருநாளாக இப்பெருநாள் அமைந்துள்ளது முஹம்மது நபி (ஸல்) அவர்களும் அவர்களதுதோழர்களும் இறுதி ஹக்கை நிறைவேற்றிய போது அங்கு குழுமியிருந்த மக்களுக்கு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு உபதேசம் செய்தார்கள். "மக்களே! நான் கூறப்போவதை நன்கு காது தாழ்த்திக் கேளுங்கள். ஏனெனில் இன்னுமொரு முறை இவ்வாறு உங்களைச் சந்திக்கும் பாக்கியம் கிடைக்குமோ என்பதை நானறி...

...யேன். இத்தினமும், இம்ம... தமும் எவ்வளவு புனிதமான... வையோ அதுபோலவே உங்... ளது உடல், பொருள் ஆ... யவை புனிதமானவை. நீ... கள் நிச்சயமாக உங்கள் இறை... வனிடத்தில் ஆஜர் செய்ய... படுவீர்கள். நீங்கள் இவ்வு... கில் செய்த செயல்கள் அ...

— மௌலவி கே...

(துணைவிரிவுரையாளர், ...


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

இனிய ஹஜ் நல்வாழ்த்துக்கள்

சி. சின்னத்துரை அன் பிறதர்ஸ்

39, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

போன் : 284, த. பெ. எண் : 101

அனைவருக்கும் அன்புகலந்த ஹஜ் வாழ்த்துக்கள்!

கண்ணுக்கினிய கருத்தைக்கவர்

மாற்றுக்குறையா தங்கப் பவுண் நகைகளுக்கு

ஞாபகத்தில் தங்கவேண்டியது

ஜப்பான் ஜுவல்லர்ஸ்

64, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.

போன்: 518

நம்பகமானவை ரவி

பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்



- நிபுத்த பாவனையுடையவை
- நீண்ட தூரிகை மயிர்
- கையாள்வது சுலபம்
- குறைந்த நேரத்தில் கூடுதலான இடப்பரப்புக்கு வர்ணம் பூசுகின்றன

உற்பத்தியாளர்கள்:
ரவி இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்.

ஹேலிஸ் லிமிட்டெட்.
தாபனத்தின் துணை நிறுவனம்

கிடைக்குமிடங்கள்: க. பொ. கூ. விற்பனை நிலையங்கள், இரும்பு வியாபாரிகள், முன்னணி சில்லறை வியாபாரிகள் மற்றும்
ஹேலிஸ் சில்லறை விற்பனை நிலையம், 40, கெயிசர் வீதி, புறக்கோட்டை, தொலைபேசி: 20052.

ரவி பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்

| வடிவமைப்பு இல | அளவு | பிறஷ் ஒன்றுக்கு சிபாரிசு செய்த விலை: |
|---|---|---|
| 001-1 | 1/2" | 5/75 |
| 001-2 | 3/4" | 6/75 |
| 001-3 | 1" | 8/70 |
| 001-4 | 1 1/2" | 11/70 |
| 001-5 | 2" | 18/40 |
| 001-6 | 2 1/2" | 24/00 |
| 001-7 | 3" | 28/70 |
| 001-8 | 4" | 39/00 |
| 001-9 | 5" | 46/70 |
| 001-10 | 6" | 57/25 |

Mel Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்

ள்

நாக்கு

களதுதோழர்களும்
கை நிறைவேற்றிய
ங்கு குழுமியிருந்த
முஹம்மது நபி
ர்கள் பின்வருமாறு
சய்தார்கள். "மக்
கூறப்போவதை
தாழ்த்திக் கேளுங்
இல் இன்னுமொரு
ாறு உங்களைச் சந்
ாக்கியம் கிடைக்
ன்பதை நானறி

தனைக்கும் பதில் சொல்லியே ஆகவேண்டும். உங்களது வாக்குறுதிகளை பூரணமாக நிறைவேற்றுங்கள். வட்டி உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது. கொடுக்கல், வாங்கல்களில் நீங்கள் எவருக்கும் அநீதி இழைக்க வேண்டாம். ஷைத்தான் என்னும் தீய சக்கள் உங்களுக்கு எப்போதும் விரோதமாகவே செயல்படும். உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளவைகளை ஏற்று விலக்கப்பட்டுள்ளவைகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். மார்க்கம் உங்களுக்கு எதைப் போதிக்கின்றதோ அதனை ஏற்று நடவுங்கள். ஞாபகமின்மையாக இருப்பது மனிதனை தவறான வழியில் இட்டுச் செல்லக் கூடியது. இதனால் அதிகமான மக்கள் வழிதவறிவிடுகின்றார்கள். அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்தவற்றை விலக்கவும், விலக்கியவற்றை அனுமதித்ததாகவும் ஆக்குவதற்கு சிலர் முனைகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டியதாகும். அல்லாஹ் பன்னிரெண்டு மாதங்களைக் கணக்கிடச் செய்துள்ளான். அவற்றில் நான்கு புனிதமாதங்களாகும். அவற்றில் மூன்று மாத

## ...ளலவி கே. எம். காலிதீன் –
(...வுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

...னமும், இம்மா
...ளவு புனிதமான
போலவே உங்க
பொருள் ஆகி
...மானவை. நீங்
...க உங்கள் இறை
ஆஜர் செய்யப்
நீங்கள் இவ்வுல
செயல்கள் அத்

ங்கள் தொடர்ச்சியாக இருக்கின்றன. இம்மாதங்களில் சங்கையாக நடந்து கொள்வது உங்கள்மீது கடமையாகும். பெண்கள்மீது உள்களுக்குள்ள உரிமைபோன்று உங்கள் மீதும் அவர்களுக்குரிமையுண்டு. அவர்கள் உங்கள்மீது வெறுப்படையும் வகையில் நடந்து கொள்ளாதீர்கள். பெண்களும் தவறானசெயல்களில் ஈடுபடாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், அவ்வாறு அவர்கள் தவறாக நடப்பின் அவர்களுடன் உறவு வைப்பதையும், அதற்காகத் தண்டிப்பதையும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. பெண்களை நீங்கள் பராமரிப்பவர்களாகக்கருதிக் கொள்ளுங்கள், அவர்களைப் பாதுகாப்பது உங்கள்மீதுள்ள பொறுப்பாகும். நீங்கள் வழிதவறிவிடாமல் இருக்கும் பொருட்டு அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனையும், எனது வாழ்க்கை முறையையும் உங்களுக்கு முன்மாதிரியாக்கியுள்ளேன். இற்றை ஏற்று நடக்கும் பொழுது நீங்கள் ஒருபோதும் வழிதவற மாட்டீர்கள்.

இவ்வாறு கூறிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு குழுமியிருந்த மக்களை நோக்கி "எனது கடமையை ஒழுங்காக நிறைவேற்றி விட்டேனோ?" எனக்கேட்டார்கள். அதற்கு அங்கிருந்தோர் "ஆம்" உங்களது கடமையைச் சரியாக நிறைவேற்றியுள்ளீர்கள் எனப் பதில் அளித்தார்கள். அதற்கு நபியவர்கள் தமது இருகரங்களையும் உயர்த்தி "யாஅல்லாஹ்"! இதற்கு நீயே சாட்சி எனக்கூறினார்கள்.

இறுதி ஹஜ்ஜில் இவ்வாறு பிரசங்கம் நிகழ்த்திய பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் சில மாதங்களின் பின் இறையடி சேர்ந்தார்கள், ஹஜ்ஜுக் கடமைகள் நிறைவேற்றும் முறைகளை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்க்கையிலேயே நடைமுறைப்படுத்திக் காட்டியமையே முஸ்லிம்கள் அனைவரும் சகோதர வாஞ்சையுடன் ஒரே இடத்தில் ஒன்றுகூட வழிஅமைத்தது.

'ஹஜ்' கடமையை நிறைவேற்றும் முஸ்லீம்கள் பாபக் கறைகளில் இருந்தும் நீங்க வேண்டும் என்பது இஸ்லாமிய சித்தாந்தமாகும். மக்காவில் கூடும் முஸ்லிம்கள் பத்துத்தினங்களுக்குமேலாக பல சமயக் கிரியைகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முற்றும் அடிபணிந்தவர்க

(8-ம் பக்கம் பார்க்க)

...ழ்த்துக்கள்!
...வர்
...கைகளுக்கு
...பது
...ஸ்
...ணம்.

அனைவருக்கும் அன்புகலந்த ஹஜ் வாழ்த்துக்கள்!
தங்க மாளிகை
அழகிற்சிறந்த
தங்க நகைகளுக்கு
தகுந்த ஸ்தாபனம்
தங்கமாளிகை
69, கன்னாதிட்டி – யாழ்ப்பாணம்.
தந்தி: 'ஜுவலர்ஸ்' தொலைபேசி: 281

அனைவருக்கும் ஹஜ் வாழ்த்துக்கள்
பிலிப்ஸ் றேடியோக்கள்
பிலிப்ஸ் டெலிவிசன்கள்
பிலிப்ஸ் கசட்டுகள்
நசனல் றேடியோக்கள்
சன்யோ றேடியோக்கள்
இன்னும் உள்நாட்டு வெளிநாட்டு றேடியோக்கள்
மிக மலிவாகப் பெற்றுக்கொள்ள
S.சுலைமான்கண்டு அன் பிறதர்
5 & 7, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் அன்புகலந்த
ஹஜ் நல்வாழ்த்துக்கள்
அழகிய பவுண் நகைகள்,
தங்கப்பவுண், வைரங்கள்,
ஆகியவற்றுக்கு
கே. என். எம்.
மீருன் சாஹிப்
தங்கப்பவுன் நகை மாளிகை
கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அபிமானிகள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த
ஹஜ் வாழ்த்துக்கள்
SALAMS
சலாம்ஸ்
(TRANSPORTERS)
95, K. K. S. Road, JAFFNA T. P. 7697
65, Dam Street, COLOMBO T. P. 35509




சிங்கர்
சைக்கிள்



விலை ரூபா: 890/- (...)
சிங்கர் (ஸ்ரீ லங்கா)
லிமிட்டெட்,
83, ... வீதி, கொழும்பு - 1 தொலைபேசி: 214...
சிங்கர் சைக்கிள் – சிங்கரின் பாரம்பரிய சிறப்பியல்புகளைக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகந்தை அகன்றால் அம்பிகை குடிகொள்வாள்"

## கலைமகள் விழாவில் விரிவுரையாளர்

(அரியாலை)

"தாய் தன் பிள்ளை மேல் காட்டும் அன்புக்கு நிகரான அன்பு வேறில்லை. அதைப் போல எம்மெல்லோருக்கும் தாயாகிய தெய்வம் காட்டும் அன்பு எல்லாவற்றையும்விட மேலானதாகும். சுவாமி மணிவாசகப்பெருமான், தெய்வத்தின் அன்பை தாயின் அன்போடு ஒப்பிடுகிறார். இந்த அன்புருவமாகி தெய்வமாகிய கலைமகளை நாம் வணங்கி, அவரது ஆசியைப்பெறவே கலைமகள் விழாக்கள் நடாத்தப்படுகின்றன".

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரியின் ஆதரவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். விநாயகமூர்த்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு.விநாயகமூர்த்திதொடர்ந்து பேசுகையில்:"நாம்வணங்கும் தெய்வம் உவமை கடந்த தெய்வமாகும். இதனை நாம் உவமையாகச் சொல்லமுடியாது. எம்மை ஈன்றெடுப்பதன் மூலம் தான் எமக்கு உரியவளாகிறாள். ஆனால் திருவருட் சக்தியாகிய தெய்வம் நமது பிறவிகளின் மேல் தொடர்ந்து நிற்கிறது. திருவருட்சக்தி தாய் வடிவத்தில் நிற்கிறது. இது எம்மைத் தெய்வத்திடம் சேர்க்கிறது. வீரம், செல்வம், கல்வி என்பன ஒருங்கமைந்திருந்தால் தான் ஒருவனின் வாழ்வு சிறப்படையும். இவைகள் எல்லாவற்றையும் திருவருட்சக்தி எமக்குத் தருகிறது. தெய்வத்தை நாம் அடைய எமக்கு உதவுவது அறிவாகும். இந்த அறிவு கல்வியின் மூலமே உண்டாகவேண்டும். மாணவர்கள் கல்வியை முறையாகக் கற்க வேண்டும். எம்முள் இருக்கும் அகந்தையையும், நான் என்ற அகங்காரத்தையும் நாம் வேரோடு களைந்தால்தான் அம்பிகை எம்முள்ளத்தில் குடிகொள்வாள். அம்பிகையின் அருள் மூலமே நாம் கல்வியையும், வீரத்தையும், செல்வத்தையும் பெறமுடியும்" என்று குறிப்பிட்டார்.

கல்லூரி மாணவர்களால் பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. மாணவர்களின் வாத்தியப் பிருந்தத்தில் வயலின் எம். தேவ்ராசா, புல்லாங்குழல் எம். சபேசன், ஆர். சுதாகரன், மிருதங்கம் ஜீ. கணேஸ்வரன், தபேலா ஏ. கௌரிசங்கர், கஞ்சிரா பி. குழந்தைவேலு, கடம் என். சிறிசண்முகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். மாணவர்களின் மிருதங்கக் கச்சேரியில் எஸ். இரவீந்திரன், எம். அரவிந்தன், எஸ். சுரேஷ்குமார், கே. பிரபாகரன் ஆகியோர் மிருதங்கம்வாசித்தனர். மாணவர்களின் தாளவாத்தியக்கச்சேரியில் வீணை யே. ஜெய்கரன், கடம் ஆர். இரகுனந்தன், மிருதங்கம். என். சிறிசண்முகநாதன், மணிவண்ணன், வி. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குஞ்சர்கடை-கரணவாய்

# வீதி புனரமைப்பு

(புலோலி)

சுமார் மூன்று வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த குஞ்சர்கடை-கரணவாய் வீதி புனரமைப்புச் செய்யப்படுமென யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் அறிவித்துள்ளார்.

சுமார் மூன்றுவருட காலங்களாக, இவ்வீதியைத் திருத்திப் புனரமைப்புச் செய்வதற்கென கற்கள் கொண்டுவந்துபோடப்பட்டிருப்பதாகவும், ஆனால் அவ்வீதிபுனரமைப்புச்செய்யப்படவில்லையென்றும், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் சோளங்கன் சனசமூகநிலையத்தினர் யாழ். மாவட்ட அமைச்சரைக் கோரியிருந்தனர்.

மாவட்ட அமைச்சர், மேற்படி வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறிவித்துள்ளார். (ஈ)

# கொழும்பு மருத்துவக் கல்வி நிறுவக கலைமகள் விழா

(பலாலி)

கொழும்பு பல்கலைக் கழக உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தினரின் கலைமகள் விழா இம்மாதம் 22ம் திகதி நடைபெறவிருக்கிறது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிராந்திய அபிவிருத்தி இந்து கலை கலாச்சார தமிழ்மொழி அமைச்சர் திரு. செ. இராசதுரையும், திருமதி இராசதுரையும் பிரதமவிருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

உள்நாட்டு மருத்துவக்கல்வி நிறுவகத்தின் இந்துமாமன்றம் நடாத்தும் இவ்விழாவில் கலை கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஈ)

# "தமிழ்மக்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது"

-- தேவநாயகம் எம். பி.

(மட்டக்களப்பு)

"ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி செலுத்துகின்ற காலங்களில் இந்நாட்டில் மொழிப் பிரச்சனை ஏற்படவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறிய போதே மொழிப்பிரச்னைக்கு அத்திபாரம் இடப்பட்டது. தமிழ்பேசும் மக்களின் கடந்த கால கோரிக்கைகள்யாவும் இன்று நிறைவேற்றப்பட்டுவிட்டன."

இவ்வாறு வவுணதீவு மண்முனை மேற்கு கொத்தியாபுலை என்னும் கிராமத்தில் நடைபெற்ற ஐ. தே. க. கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்ட கற்குடா எம். பி.யும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் குறிப்பிட்டார்.

திரு. க. சோமநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. தேவநாயகம் தொடர்ந்து பேசுகையில்; ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி 1956ம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியதோ அன்றுமுதல் மொழிப் பிரச்னை தலைதூக்கியுள்ளது. தமிழ் — சிங்கள அரசியல் தலைவர்களாலும் இப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருந்துவந்தது. ஆனால் இன்று தமிழ்மக்கள் கடந்தகாலங்களில் கோரிவந்த உரிமைகள் வழங்கப்பட்டுவிட்டன. பிரச்னைகள் எதுவும் இல்லை. இதனை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உணர்ந்து தான் மாவட்ட அபிவிருத்திச்சபை சட்டத்தை ஆதரித்து தங்கள் பகுதி அபிவிருத்தியடைய வேண்டுமென்று விரும்பியுள்ளார்கள்" என்றார்."

மற்றும் திரு. ஐ. ஆர். சேவியர், கன்னன்குடா கிராம சபை முன்னாள் தலைவர் திரு. க. அன்னகேசரி, திரு. எஸ். கந்தசாமி உட்படப் பலர் உரையாற்றினர். (ஈ)

# இசை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

(கிராமியம்) - யாழ். இராமநாதன் கல்லூரி, இறம்பைக்குளம் ம. வி, மட். அரசடி ம. வி.

(புதிய ஆக்கம்) - யாழ். இந்து மகளிர் கல்லூரி, மட். புனித சிசிலியா பெண்கள் உ. பாடசாலை, சொறிக் கல்முனை றோ. க. த. பாடசாலை. [ஈ]

(தொடரும்)

# சீர்திருத்தக்கழக ஆண்டுவிழா

(புலோலி)

ஐக்கிய சமூக சீர்திருத்தக்கழகத்தின் முதலாவது ஆண்டு விழா இம்மாதம் 25ம் திகதி புலோலி அல்வாய் அம்பலவன் அரங்கில் நடைபெறவிருக்கிறது. (ஈ)


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும்

# இனிய ஹஜ் நல்வாழ்த்துக்கள்

யப்பான் நாட்டிலிருந்து விசேஷமாக வரவழைக்கப்பட்டு, வடபகுதி விவசாய நண்பர்களின் உற்ற தோழனுகத் திகழ்வது "இசுக்கி" உழவுயந்திரம்!!

எமது காட்சிச்சாலையில் பார்வையிட்டு கொள்முதல் செய்யலாம்! இலாபகரமானது!!

குறைந்த எரிபொருள்; அதிக சக்திகொண்டது;
இலகுவான கிளச் அமைப்பு;
சரிப்படுத்தும் கைப்பிடி; சுழலும் மண்வெட்டி;
டீசல் என்ஜின்; அதிகபாரம் ஏற்றலாம்
தகுதிகாண் பொருட்களை நாடுவோர்
"இசுக்கி"யையே விரும்புவர்!

இவை மட்டுமா?

எதுவேண்டுமோ அத்தனையும் கிடைக்கிறது எம்மிடம்!!




விவசாயிகளின் தேவைகளுக்கு:-

நீரிறைக்கும் யந்திரம், இரண்டுசில்லு உழவு இயந்திரம், தெளிகருவிகள், உப உறுப்புக்கள், அல்கத்தீன் குழாய்கள், கிருமி நாசினிகள், விவசாய உபகரணங்கள், மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பயிர்ச் செய்கைகளுக்கான உரக்கலவைகள்.

உப உணவுப் பொருட்கள்:-

பூடு, மிளகு, கிலிம் பாலுணவு, நெஸ்டம், ஓவல்ரின், வெஸ்பாக் டின் மீன்.

பாவனைப் பொருட்கள்: கோல்மன் பெற்ரோமாக்ஸ், கால்நடைகளுக்கு: உணவுத்தின் வகைகள், சகல மருந்துவகைகள்

ப. நோ. கூ. சங்கங்களுக்கு சலுகை வசதியுண்டு

வர்த்தக விசாரணைகள்:

# மார்க்பெட் - MARKFED

112, பிரதான வீதி, (போன் 504) யாழ்ப்பாணம்,
[illegible] சதுக்கம், 127, கிருன்பாஸ் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - லதா - வாணிஸ்ரீ
**ஊருக்கு உழைப்பவன்**
எதிர்பாருங்கள்
**ஒரேவானம் ஒரேபூமி**

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வசூலில் பெரும் சாதனை! 3-வது வெற்றி வாரம்!
ஆஹா! இது என்ன பெண்கள் கூட்டம்? பெண்குலத்தின் பெருமையை எடுத்துக் காட்டும் கோகிலா. தமிழ் வசனநடைக்கு பெருமை தேடித்தந்த கலைஞர் கருணாநிதி இவர்களைக் காண ராஜா வெண்திரையை நாடுங்கள். 20 நாட்களில் 1 லட்சம் பேர் பார்த்துவிட்டனர். இடத்துக்கு முந்துங்கள்.
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
**ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்**
மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)


# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 4-ம் திகதி
(திங்கட்கிழமை)
(20- 10 -1980)

மேடம்; ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப்பிணக்குகளால் கலகம் தோன்றக்கூடும். தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும் பொறுமை நன்று.

இடபம்; பொறியிலாளருக்கு இன்று பொன்னான தினம். பூமிவிவகாரத்தில் இன்று நல்ல முடிவு ஏற்படும். செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும் விருந்திற்கும் இடமுண்டு.

மிதுனம்! செய்தொழிலால் சிறப்புக்கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. நீண்டநாள் பிரச்னை இன்று நல்ல முடிவிற்கு வரும். வெளியிடத்தில் இருந்து நல்ல செய்தியும் கிடைக்கும்.

கடகம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. பிரயாணத்தைப் பிற்போடுவதோடு புதிய முதலீட்டையும் இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

சிங்கம்: இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக்கிடைக்கும் காதலர் வாழ்க்கையில் தடைகள் விலகும் பெற்றோர் ஆதரவும் உண்டு. குடும்பத்தில்மகிழ்ச்சி நிலவும்.

கன்னி: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக இருப்பர். தொழில் துறையில் நஷ்டம் ஏற்படலாம். கடன் தொல்லைகள் கவலையைத்தரும்.

துலாம்: தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள். யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

விருச்சம்: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். வெளியிடத்தொடர்புகள் மூலம் ஆதரவு அதிகரிக்கும் வணிகர்களாயின் வர்த்தகம் சம்பந்தமாக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம்.

தனுசு; பொருள் வளத்தில் புதுப்பொலிவு காணப்படும். சிலருக்கும் பிறந்தகத்தின் எண்ணம் தலைதூக்கும்' புத்திரர்களால் புகழும் சகோதர வழியாள் சுகமும் உண்டு.

மகரம்: குறுக்குவழித்தலையிடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும். திடீர் நடவடிக்கையின் மூலம் நீங்கள் வருந்தக்கூடும் மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

கும்பம்: கணவன் மனைவி உறவுமுறை பூசல்கள் நிறைந்ததாகக் 'காணப்படும் முக்மன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வர்.

மீனம்: பேச்சில் நிதானம் பெருமையைத்தேடித்தரும்' குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் பிரச்சனைகள் பல இன்று முடிவை ஏற்படுத்தும் கல்வி கற்கும் மாணவருக்கு இன்று பொன்னான நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# கொடும்பாவி எரிப்பு வழக்கில் சமரசம்

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு கொடும்பாவி எரிப்பு வழக்கில் சமரசம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கில் நயினாதீவு வடக்கு கிராம சேவையாளர் வேலுப்பிள்ளை சிவப்பிரகாசத்தின் கொடும்பாவியைக் கட்டிப்பாடையில் வைத்து பறைமேளம், கொள்ளிக்குடம் சகிதம் ஊர்வலமாகக் கொண்டு சென்று நயினாதீவிலுள்ள மயானம் ஒன்றில் தகனம் செய்ததாகவும், அவரைக் குத்திக் கொலைசெய்து குடலை மாலையாகப் போடுவோம் என்றுபயமுறுத்தியதாகவும் அதேஇடத்தைச் சேர்ந்த பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தலைவர், மற்றும் ஒரு முன்னாள் பொலிஸ்கான்ஸ்டபிள் உட்பட எட்டு இளைஞர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரரான சிவப்பிரகாசம்நீண்ட நேரமாகக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருந்த சமயம் கிராமத்தின் முன்னேற்றங்கருதி இரு பகுதியினருக்குமிடையில் இணககம் ஏற்படவேண்டும் என நீதிபதி தெரிவித்த கருத்தை இருபகுதியினரும் ஏற்றுக்கொண்டதையடுத்து இவ்வழக்கு இணக்கம் காணப்பட்டது. அத்துடன் கிராமசேவையாளரும் ப.நோ. கூ. சங்க தலைவரும் மேற்கத்தியமுறைபில் கைலாகு கொடுத்தனர்.

அத்துடன் கிராமசேவையாளரின் நியாய பூர்வமான கடமைகளில் தலையிடுவதில்லை என்று எதிரிகள் வாக்களித்ததோடு இருபகுதியினரும் ஒருவரோடொருவர் தனிப்பட்ட முறையிலும் தலையிடுவதில்லையென உறுதியளித்தனர்.

இக்கொடும்பாவி எரிப்புசம்பந்தமாக சிலபுதினப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளும் ஒருகட்டத்தில் வழக்காளி தரப்பு சட்டத்தரணியினால் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டது.

இவ்வழக்கில் பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி பி. கதிரவேலு சட்டத்தரணி கைலாசநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரிதரப்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆஜராகியிருந்தார்.

# இன்று இறுதிப்போட்டியும் ஆண்டுவிழாவும்

(பலாலி)

தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினதும், கலைமகள் சனசமூகநிலையத்தினதும் 33வது ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறவிருக்கிறது. இந்நிறைவு விழாவையொட்டி கடந்த 2 வாரமாக நடைபெற்றுவந்த மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகள் விழாவின் ஆரம்பத்தில் நடைபெறவிருக்கிறது.

காங்கேசன்துறை மகாவித்தியாலய திறந்தவெளியரங்கில் இன்று மாலை வலிகாமம் விளையாட்டு உத்தியோகத்தர் திரு. அ. முருகையா கொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். திரு. கே. வீ. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை எம். பீ. திரு. தா. திருநாவுக்கரசு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிப்பதுடன், திருமதி க. திருநாவுக்கரசு போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. (ஈ)


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-15
**எங்கம்மா சபதம்**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி
விஜயா-நாகேஷ்
**பாலாடை**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
**தாய்**

எழில் மிகு யாழ். ஸ்ரீதர் அரங்கில்
**வெற்றி முரசு கொட்டும் 3-வது வாரமாக**
அலைமோதும் ஜனசமுத்திரத்தில் கொட்டும் மழையிலும் கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் **M. G. R.** மற்றும்
**லதா, நிர்மலா, V. K. ராமசாமி, P. S வீரப்பா நம்பியார், தேங்காய், நாகேஷ், கண்ணன்**
மற்றும் பலர் திறம்பட நடித்த ஸ்ரீதரின்
**மீனவ நண்பன்**
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணக்கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு 4 காட்சிகள்
கீதாலயா மூவிஸ்
அளிக்கும்
மாத்தளை கார்த்திகேசுவின்
டீன்குமார்,
K.S. பாலச்சந்திரன்,
பரீனலை,
விஜயராஜா
நடித்த

**'அவள் ஒரு ஜீவநதி'** சிறந்த தமிழ் ...

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2 15, 4-45, 7-15, 9-30
THE **GAUNTLET**

**லிடோ**
(யாழ்நகர்)
Daily at: 10-30 m, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm
RIVER OF THE GREAT CAYMAN

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
இதுவரை லட்சக்கணக்கான மாதர்கள் பார்த்துவிட்டார்கள். பார்க்கத்தவறியவர்கள் பார்க்கத் தவறாதீர்கள்! —அரிய சந்தர்ப்பம்—
**நீயா?** இன்னும் சிலதினங்கள் மட்டும்.
—கலர்—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள்,
நண்பர்கள்,
அனைவருக்கும்.

ஹஜ் நல்வாழ்த்துக்கள்

சீக்கோ டிரேடர்ஸ்
(உட்புறம்)
43, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## இந்திய மந்திரிசபை விஸ்தரிப்பு

புதுடில்லி, அக் 19 இந்திய மந்திரிசபை மேலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கபினட் அந்தஸ்துள்ள மந்திரியும் ஆறு ராஜாங்க மந்திரிகளும் நான்கு பிரதிமந்திரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். சில அமைச்சர்களின் இலாகாக்களிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எஸ். பி. சவான்கல்விமந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

விஜயதசமியில்
படிப்பைத் தொடங்க
பாலர்கள் விரும்புவது
வண்ணத்தமிழ்
அரிச்சுவடி
அழகான வண்ணப்படங்களுடன்
விலை ரூபா 2.-
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## ஹஜ்ஜுப்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக தாங்கள் விட்டதவறுகளுக்காக மனமுருகி அழுது அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகின்றனர். பெரும் பாவான சமயக் கிரியைகள் கூட்டாகவே நிறைவேற்றப் படுகின்றன; இதனால் மனித சமுதாயத்தின் சமயத்துவக் கோட்பாடு நிலைநிறுத்தப்படுகின்றது.

ஹஜ்ஜுக்கடமையை நிறைவேற்றும் முறைபற்றி திருக்குர்ஆனில் இரண்டாம் அத்தியாயத்தில் நூற்றித் தொண்ணூற்றேழாவது வசனம் கீழ் வருமாறு விளக்கமளிக்கிறது.

"ஹஜ்ஜு (அதற்கென) குறிப்பிட்ட (ஷவ்வால், துல் கஅதா, துல்ஹஜ் ஆகிய) மாதங்களிலேயே நிறைவேற்றப்படல் வேண்டும். ஆகவே இம்மாதங்களில் எவரேனும் (இஹ்ராம்-ஹஜ்ஜுக்குரிய விசேட உடை அணிந்து) ஹஜ்ஜைத் தன்மீது கடமையாக்கிக் கொண்டால் ஹஜ்ஜு (மாதத்தின் பத்தாம் நாள்) வரையில், உடலின்பங்கள், தீயவார்த்தைகள் பேசுதல், சண்டையிட்டுக் கொள்ளுதல் கூடாது. (இவைகளைத் தவிர்ந்து) நீங்கள் என்ன நன்மை செய்த போதிலும், நிச்சயமாக அல்லாஹ் அதற்குரிய கூலியைத் தருவான். தவிர (ஹஜ்ஜுயாத்திரைக்கு தேவையான) உணவுகளை (முன்னதாகவே) ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் ஆயத்தம் செய்து கொள்வதில் எல்லாம் மேலானது பரிசுத்தத் தன்மையே. ஆகவே அறிவாளிகளே! நீங்கள் (குறிப்பாக ஹஜ்ஜுடைய காலத்தில்) எனக்குப் பயந்து பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள்."

நபி இபுறுறுஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து தனது மகனை பலியிட முனைந்த பொழுது அதற்குப் பதிலாக செம்மறி ஆடு ஒன்று பலியிட வசதி செய்யப்பட்டது. ஹஜ்ஜுக்குச் செல்லும் ஹஜ்ஜாஜிகள் ஆடு, மாடு, ஒட்டகை இவைகளில் ஒன்றை இறைவனுக்கா (குர்பான்)- பலியிடுவது கடமையாகும். இது பற்றி திருக்குர்ஆனில் பிரஸ்தாபிக்கும் பொழுது:

" குர்பான்-பலியிடுவதற்கான) ஒட்டகங்கள், உங்களுக்காக உண்டாக்கப்பட்ட அல்லாஹ்வுடைய சடங்குகளில் உள்ளவையாகும். அதில் உங்களுக்குத்தான் பெரும்நன்மை இருக்கிறது. ஆகவே (அதன் இடப்பக்கத்து முன்காலைக் கட்டி மற்றமூன்று கால்களில்) நிறுத்திவைத்து அல்லாஹ்வின் பெயரைக்கூறி அறுங்கள். அது கீழே விழுந்து (உயிர்) விட்டால் அதிலிருந்து நீங்களும் புசியுங்கள் அதைக் கேட்பவர்களுக்கும், கேட்காதவர்களுக்கும் கொடுங்கள். நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு இவ்வாறு அதனை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தோம். (இவ்வக்று குர்பானி செய்தபோதிலும்) அதன் மாமிசமோ அல்லது அதன் இரத்தமோ அல்லாஹ்வை அடைந்து விடுவதில்லை. உங்களுடைய (பரிசுத்த தன்மையும்) பயபக்தியும் தான் இறைவனை அடையும் அல்லாஹ் உங்களுக்கு நேரான வழியை அறிவித்ததற்காக (அவனுக்கு நீங்கள் குர்பாணி கொடுத்து) அவனை நீங்கள் பெருமைப்படுத்தும் பொருட்டு இவ்வாறு அவைகளை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். நபியே! இவ்வாறு குர்பாணி கொடுத்து நன்றி செய்வோருக்கு நீர் நன் மாராயம் கூறுவீராக.

அல்குர் ஆன்: அத்: 22:வசனங்கள் :36: 37)

ஹஜ் காலங்களில் ஆடு, மாடு, ஒட்டகை போன்ற மிருகங்கள் தம்மைப் பலியிட ஆயத்தமாக அவைகளே முன்வருவது அற்புத நிகழ்ச்சியாக உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மக்காவுக்குச் செல்ல வசதியில்லாதவர்களுக்கு ஏழைகளுக்கு வெள்ளிக்கிழமைகளில் ஜும் ஆத் தொழுகை அதன் பலனைக் கொடுக்கின்றது என பெருமானார் முஹமது [ஸல்] அவர்கள் மொழிந்துள்ளார்கள்

அகில உலக முஸ்லிம்களின் சகோதரத்துவ அமைப்புக்கும் ஐக்கியத்துக்கும், சமத்துவத்துக்கும், சாந்திக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக இறை விசுவாசத்தை பூரணப்படுத்துவதற்கும் புனித ஹஜ் ஒரு சமய நிறுவனமாக விளங்குகின்றது. இத்தினத்தில் உலக முஸ்லிம்கள் அனைவரும் உலகில் சாந்தி நிலவவும் மக்கள் சுபீட்சமான வாழ்வு பெறவும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றார்கள். அகில மாந்தருக்கு அல்லாஹ்வின் நேர் வழி கிட்ட எமது பிரார்த்தனைகளையும் சமர்ப்பிக்கின்றோம். 'ஈத் முபாரக்'

மக்கினொன் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினொன் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

இம் மாதம் 25ம் திகதி

## மன்னாரில் 'மாதாகிராமம்' பிரதமர் திறந்துவைப்பார்

(மன்னார்)

மன்னார் தொகுதியில் அமைக்கப்பட்ட 'மாதா மாதிரிக்கிராமம்' இம்மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை பிரதம மந்திரி திரு. பிரேமதாசாவால் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இம்மாதிரிக் கிராமம் 50 வீடுகளைக் கொண்டதுடன் மூன்று குடிநீர் கிணறுகளையும் 2 குளாய் கிணறுகளுடன் பொது நூல்நிலையம், விளையாட்டு மைதானம் உட்பட பல வசதிகளுடனும் அமைந்துள்ளது. இம் மாதிரிக் கிராமத்திற்கான 6 மைல் நீளமான பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு குடியமர்த்தப்படும் மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், போக்குவரத்து, கல்வி வசதி என்பனவும் செய்யப்படவுள்ளது. அத்துடன் மா, சஞ்சீவி போன்ற பயன்தரு மரங்களும் விவசாயப் பகுதியினால் இலவசமாக விநியோகிக்கப்பட்டு நாட்டப்படுகிறது.

மன்னார் ..... வவனியா பிரதான வீதியின் அண்மையில் வனத்தின் மத்தியில் அமைந்துள்ள இம்மாதிரிக் கிராமத்துக்கான நிலத்தை மன்னார் எம். பி. திரு. பீ. எஸ். சூசைதாசன் தெரிவு செய்திருந்தார்.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பர்னாந்து, மடுத் திருப்பதி சங்கைக்குரிய வண. தேவராசன், தேசிய வீடமைப்பு அதிகார சபை உத்தியோகஸ்தர்கள் முயற்சியால் மாதிரிக்கிராம வேலைகள் பூர்த்தியாக்கப் பட்டுள்ளன.

கிராமஎழுச்சித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் திறந்து வைக்கப்படும் முதலாவது மாதிரிக்கிராமம் இதுவாகும். அத்துடன் வனத்தின் மத்தியிலே சகல வசதிகளுடன் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மாதிரிக்கிராமம் "மாதா கிராமம்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. அன்றையதினம் உரிமையாளர்களுக்கு வீடுகளை பிரதமர் கையளிப்பார். மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் ஆர். பிரேமதாசா, மாவட்ட அமைச்சர் திரு. எம். ஈ. மஹ்றூப், மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் உரையாற்றுவர். தென்னிலங்கைக் கலைஞர்களுடன், வடபகுதிக் கலைஞர்களும் சேர்ந்து பாட்டு, மெல்லிசை அளிப்பதுடன் வில்லுப்பாட்டு, நாடகமும் இடம்பெறும். கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நடனமும் இடம்பெறும். அன்று முழுநாளும் மன்னார், வவனியாவில் இருந்தும் நேரடி பஸ்சேவையும், தனியார் சேவையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது (பவானிநி. ஈ)

## இ.மு. சங்க ஆண்டுக்கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைப்பு

(வேலணை)

வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்நேற்று தலைவருக்கும் சபையோருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டடது.

இக்கூட்டம் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. ஆ. கேதாரநாதன் தலைமையில் நடைபெற்றபோது, சங்கத்தில் அங்கத்தவராகச் சேருவதற்கும் குறிக்கப்பட்ட திகதி முடிந்த பின்னரும் புதிதாக அங்கத்தவராகச் சேருவதற்கு 56 பேர் அவகாசம் தரும்படி கேட்டு மகஜரொன்றைத் தலைவரிடம் கொடுத்தனர்.

அம் மகஜரைத் தலைவர் அங்கீகாரத்நிற்த விட்டபோதே தலைவருக்கும், அங்கத்தவர்களுக்குமிடையே இக்கருத்து மோதல் ஏற்பட்டது.

## ஆஸி. தேர்தல் பிறேசர் வெற்றி

கான்பரா, அக். 19

ஆஸ்திரேலிய பொதுத் தேர்தலில் திரு, மல்கம் பிறேஸர் மீண்டும் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இறுதித் தேர்தல் முடிவுகள் மேலும் சிலதினங்களில் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப் பட்டபோதிலும் இதுவரை வெளியான முடிவுகளைத் தொடர்ந்து திரு. மல்கம் பிறேஸரின் வெற்றியை எதிர்க்கட்சித்தலைவர் இன்று ஒப்புக் கொண்டுள்ளார்.

## கிளிநொச்சி இந்திரவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

பகுத்தறிவுப்பாசறை நடாத்தும் இரண்டு நாள் இந்திர விழாவும், சிறப்பு மகாநாடும் நேற்று முதல் இன்று வரை பகல் இரவாக கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்திலும், க. வி. மைதானத்திலும் நடைபெறுகிறது.

இரண்டாம் நாள் திங்கட்கிழமை நடைபெறும் காலை நிகழ்ச்சிகளில் தமிழகத்தைச் சேர்ந்த பல அறிஞர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலருடன் இலங்கையின் தலைசிறந்த தமிழறிஞர்கள் பலரும் கலந்து கொள்வார்களென்று அறிவிக்கப்படுகிறது.

இன்று காலை நிகழ்ச்சிகள் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையிலும் மாலை நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ பேராசிரியர் திரு. பி. பாலசுந்தரம் தலைமையிலும் நடைபெறுகிறது.

பகுத்தறிவு என்னும்விடயம் பற்றி கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் நடைபெறும் கவியரங்கை கவிஞர் எமில் தொடக்கி வைக்க கவிஞர்கள் வாகரைவாணன், முருகுசிவன் ஆகியோர் கவி பாடுவார்கள்,

திரு. என். கே. தர்மலிங்கம் தலைமையில் இரவு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தவில் வித்துவான் தெக்ஷணாமூர்த்தியின் மகன் குழுவினரின் தவில் கச்சேரியுடன் ஆரம்பமாகும். இரவு நிகழ்ச்சியில் திரு. ப, வை. ஜெயபாலன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

"காலமும் கருத்தும்" என்னும் பொருள் பற்றி எதிர்க் கட்சித், தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், இந்திரவிழா என்னும் பொருள் பற்றி ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினமும் உரையாற்றுவார்கள்.

தமிழ்நாடு கவிச் செம்மல் அரு. கோபாலன், தமிழ்நாடு வொயலாக் கல்லூரி சென்னை துணைப்பேராசிரியர் திரு. கே. ஜான் சுந்தர், தமிழ்நாடு டாக்டர் பெருங் கவிக்கோ சேதுராமன் ஆகியோர் "மக்கள் காப்பியம் - சிலப்பதிகாரம்" என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்கள்.

திரு. மாவை சேனாதிராசா "பகுத்தறிவுப் புரட்சியில் இளைஞரின் பங்கு" என்னும் பொருள் பற்றியும், சட்டத்தரணி எம். என். ஐயூப் "காலத்தை வென்ற காப்பியம்" என்னும் பொருள் பற்றியும் உரையாற்றுவர்.

கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [கொ]

## இந்தியத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். இந்துக் கல்லூரியில் அமைந்திருக்கும் நல்லூர்த் தொகுதி கற்றலுக்கும் அபிவிருத்திக்குமான மூலவள நிலையத்திற்கு இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் எபிரகாம் இன்றுமாலை விஜயம்செய்வார்.

நிலையச்சார்பில் வரவேற்பும் தேநீர் விருந்தும் அளிக்கப் படும். தூதுவருக்கு அளிக்கப் படும் இவ்வரவேற்பில் நல்லூர் எம். பி, வடமாநில கல்விப் பணிப்பாளர், மாநகர முதல்வர் முதலியோர் கலந்து கொள்கின்றனர்.

## கொரம்ஷார்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பட்டபோதிலும் ஈரானில் கொரம்ஷார் நகரில் ஈரான் துருப்புக்களுக்கும் ஈராக் துருப்புக்களுக்குமிடையில் நேரடியாகக் கடும்சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lank under No. GE 8948/78 The Eelanaadu P.B. No. 49 Tgrame Eelanaadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org